بسم الله الرحمن الرحيم     نحمده ونصلّی علی رسوله الکریم     وعلی عبده المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர்

காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 16

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

17 ரமலான் 1437 ஹிஜ்ரி கமரி   23 இஹ்ஸான் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி   23 ஜூன் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**அல்லாஹ் ஜல்ல ஷானஹூ இரட்சிப்பு பெறுவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதுடன் தொடர்புபடுத்திக் கூறியுள்ளான். பிறகு, இவ்வசனங்கள் தருகின்ற உறுதியான ஆதாரங்களிலிருந்து முகந்திருப்பியவாறு உவமை வடிவிலான விஷயங்களின் பக்கம் ஓடுவது நேர்மையின்மையாகும். நயவஞ்சகத்தின் நோயால் பீடிக்கப்பட்டு நோயாளிகளாக இருக்கின்ற அத்தகைய மக்களே உவமை வடிவிலான விஷயங்களின் பக்கம் ஓடுகின்றனர்.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

(15) اَلَمۡ يَعۡلَمُوۡۤا اَنَّهٗ مَنۡ يُّحَادِدِ اللّٰهَ وَرَسُوۡلَهٗ فَاَنَّ لَهٗ نَارَ جَهَنَّمَ خَالِدًا فِيۡهَا ؕ ذٰلِكَ الۡخِزۡىُ الۡعَظِيۡمُ

அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் எதிர்ப்பவனை இறைவன் நரகில் போடுவான். அவன் அதில் நெடுங்காலம் வாழ்ந்து வருவான் என்பது அவர்களுக்கு தெரியாதா? இது மாபெரும் அழிவாகும். (9:63) இப்போது மியான் அப்துல் ஹகீம் கான் தனது கருத்து என்ன என்பதைக் கூறட்டும். இறைவனின் இந்தக் கட்டளையை அவர் ஏற்றுக் கொள்வாரா என்ன? அல்லது வீரத்துடன் இந்த வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள எச்சரிக்கையை தமது தலையில் சுமக்க முன் வருவாரா?

(16) وَاِذۡ اَخَذَ اللّٰهُ مِيۡثَاقَ النَّبِيّٖنَ لَمَاۤ اٰتَيۡتُكُمۡ مِّنۡ كِتٰبٍ وَّحِكۡمَةٍ ثُمَّ جَآءَكُمۡ رَسُوۡلٌ مُّصَدِّقٌ لِّمَا مَعَكُمۡ لَتُؤۡمِنُنَّ بِهٖ وَلَتَنۡصُرُنَّهٗ ؕ قَالَ ءَاَقۡرَرۡتُمۡ وَاَخَذۡتُمۡ عَلٰى ذٰلِكُمۡ اِصۡرِىۡ ؕ قَالُوۡۤا اَقۡرَرۡنَا ؕ قَالَ فَاشۡهَدُوۡا وَاَنَا مَعَكُمۡ مِّنَ الشّٰهِدِيۡنَ

அல்லாஹ் எல்லா நபிமார்களிடமும் உறுதிமொழி வாங்கிய நேரத்தை நினைவு கூர்வீராக. அதாவது, நான் உங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் வழங்குவேன். பிறகு உங்களிடம் இறுதிக் காலத்தில் எனது தூதர் வருவார். அவர் உங்களிடமுள்ள வேதங்களை மெய்ப்பிப்பார். அவரிடம் நீங்கள் நம்பிக்கை கொண்டேயாக வேண்டும். இன்னும் அவருக்கு உதவியும் செய்ய வேண்டும். நீங்கள் ஒப்புக் கொண்டு இந்த உடன்படிக்கையில் நிலைத்து நிற்பீர்களா? என்று அவன் கூறியதற்கு நாங்கள் ஒப்புக் கொள்கின்றோம் என்று அவர்கள் கூறினர். இப்போது நீங்கள் ஒப்புக் கொண்டதற்கு சாட்சியாக இருங்கள். நானும் உங்களுடன் இந்த விஷயத்திற்குச் சாட்சியாக இருக்கின்றேன் என்று இறைவன் கூறினான். (3:82)

நபிமார்கள் தத்தமது காலத்தில் மரணித்து விட்டனர். இந்தக் கட்டளை ஒவ்வொரு நபியின் சமுதாயத்திற்கும் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது, அந்தத் தூதர் தோன்றும்போது அவர் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். அவ்வாறு செய்யாமல் இருந்தால் நீங்கள் பிடிக்கப்படுவீர்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டிருந்தது. பாதி முல்லாவாக இருப்பது ஈமானுக்கு அபாயகரமானதாகும். எனவே, மியான் அப்துல் ஹகீம் கான் வெறுமனே காய்ந்துபோன தவ்ஹீதினால் மட்டும் இரட்சிப்பைப் பெற்று கொள்ள முடியும் என்றால், பிறகு இறைவன் அவனது ஏகத்துவத்தை மட்டும் ஏற்றுக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாதவரை எதற்கு தண்டிக்க வேண்டும்? என்ற கேள்விக்கு இப்போது பதில் கூறட்டும்.

இதைத் தவிர உபாகமம் அதிகாரம் 18 -ல் இந்த வசனம் இருக்கின்றது. அதாவது, இறுதிக் காலத்தில் தோன்றும் நபியை எவர் ஏற்றுக் கொள்ள மாட்டாரோ நான் அதுபற்றி அவரிடம் கேட்பேன் என்று இறைவன் கூறுகின்றான். எனவே, ஏகத்துவம் மட்டுமே போதுமானதாக இருக்கும்போது இவ்வாறு ஏன் கேள்வி கேட்கப்பட வேண்டும்? நான் போதுமான அளவில் திருக்குர்ஆனிலிருந்து இந்த வசனங்களை எழுதியுள்ளேன். அது அல்லாமல் திருக்குர்ஆன் இப்படிப்பட்ட வசனங்களால் நிரம்பி காணப்படுகின்றது. திருக்குர்ஆன் இதுபோன்ற வசனங்களால் ஆரம்பமாகி இருக்கின்றது.

இறைவன் கூறுகின்றான்: اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ அதாவது, எங்கள் இறைவா! எங்களை நீ அருள் புரிந்துள்ள தூதர்கள் மற்றும் நபிமார்களின் வழியில் வழிநடத்துவாயாக!

☆ இப்போது ஐவேளைத் தொழுகைகளிலும் ஓதப்படுகின்ற இந்த வசனத்தில் இறைவனின் ஆன்மீக அருட்கொடையாகிய இறை ஞானமும், இறைவன் மீதுள்ள அன்பும் தூதர்கள் மற்றும் நபிமார்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. வேறு எந்த வழியின் மூலமாகவும் அது கிடைக்காது என்பது தெளிவாகத் தெரிக்கின்றது. மியான் அப்துல் ஹகீம் கான் தொழுகின்றாரா? இல்லையா? என்பதைப் பற்றி நமக்கு தெரியாது. அவர் தொழுகின்றார் என்றால், இந்த வசனங்களின் பொருளை அவர் அறியாமல் இருப்பது சாத்தியமேயில்லை. ஆனால், அவரது பார்வையில் தவ்ஹீது மட்டுமே போதுமானதாக இருக்கும்போது பிறகு தொழ வேண்டிய அவசியம் என்ன? தொழுகை தூதரின் இறை வணக்கத்திற்கான ஒரு வழிமுறையாகக் கூறப்படுக்கின்றது. எவர் தூதரைப் பின்பற்றி நடப்பது பற்றி சிறிதும் பொருட்படுத்தாமல் இருக்கின்றாரோ அவர் தொழுவதன் நோக்கம் என்னவாக இருக்க முடியும்? அவரது பார்வையில் ஏகத்துவத்தை ஏற்றுக் கொள்கின்ற பிராமணர் கூட இரட்சிப்பைப் பெற்றவராக இருக்கின்றார். அவர் என்ன தொழுகையை தொழுகின்றார்? ஏனென்றால், அவரது பார்வையில் ஒரு நபர் இஸ்லாத்தை விட்டு விட்டு முர்தத் ஆகி விட்டாலும் கூட அவரும் கூட தனது காய்ந்துபோன தவ்ஹீதின் காரணமாக இரட்சிப்பைப் பெற முடியும். மேலும், யூதராகவோ அல்லது கிறிஸ்தவராகவோ அல்லது ஆரியராகவோ இருக்கின்ற ஒரு மனிதர் இஸ்லாத்தை பொய்ப்படுத்து -பவராகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பகைவராக இருந்தாலும் கூட அவர் ஏகத்துவவாதியாக இருந்தால் அவரும் கூட இரட்சிப்பைப் பெற முடியும் என்றே அவர் கருதுகின்றார். பிறகு தொழுகையினால் எதுவும் கிடைக்காது. நோன்புகள் வீணானதாகும் என்பதே இவரது கருத்தாக இருக்கும். ஆனால், நம்பிக்கை கொண்ட ஒருவருக்கு இந்த வசனம் மட்டுமே போதுமானதாகும். இதன் மூலமாக ஆன்மீகச் செல்வத்தின் எஜமானராக நபிமார்களும் தூதர்களும் மட்டுமே இருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் அவர்களைப் பின்பற்றிச் செல்வதன் மூலமாக அதிலிருந்து பங்கு கிடைக்கின்றது. பிறகு சூரா அல் பக்கராவின் ஆரம்பத்தில் இந்த வசனங்கள் இருக்கின்றன.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அல்லாஹ் நம்பிக்கை கொண்டவரிடம் கூறுகிறான். உங்கள் மீது எப்போதும் பார்வையை வைத்திருங்கள். ஷய்த்தானின் அடிச்சுவட்டில் நாம் செல்லவில்லையே என்று பார்த்துக் கொண்டிருங்கள் என்று கூறுகின்றான். மனிதன் வெளிப்படையாக சின்னஞ்சிறு கட்டளையை விட்டு விலகினாலும் ஷய்த்தான் பக்கமே போகிறான். எனவே, அதிகமாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஷய்த்தானிடமிருந்து தப்பிப்பதற்கு வீடுகளிலேயே அத்தகைய ஒரு சூழலை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. அவனது ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் தப்பிப்பது மட்டுமின்றி அவனது தாக்குதலுக்குப் பதிலும் கொடுக்க வேண்டும். ஷய்த்தானிடமிருந்து தப்பிக்க மிகப் பெரும் அடைக்கலம் அல்லாஹ்வேயாவான். எனவே, இந்த வழிகெட்ட காலத்தில் இஸ்திக்ஃபார் செய்தவாறு அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வர முயற்சி செய்ய வேண்டும். இஸ்திக்ஃபார் செய்வதன் மூலம் மனிதன் அல்லாஹ்வின் அடைக்கலத்திற்குள் வர முடியும்.

பெரும்பாலான தீமைகளை ஆய்வு செய்தால் பெரியவரிலிருந்து சிறியவர் வரை ஃபஜ்ர் தொழுகையை நேரத்தில் தொழாததற்குக் காரணம் இரவில் நீண்ட நேரம் டி.வி. பார்த்துக் கொண்டிருப்பது அல்லது இன்டர்நெட்டில் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பதாகும். இதன் விளைவாக அதிகாலையில் கண்கள் திறப்பதில்லை. இன்னும் சொல்வதாயின், அத்தகைய மக்களுக்கு அதிகாலை தொழுகைக்காக எழ வேண்டும் என்ற கவனம் இருப்பதில்லை.

ஷய்த்தான் வெறும் உலக நிகழ்ச்சியின் ஆசையைக் காட்டி தொழுகையிலிருந்து விலக்கிக் கொண்டு சென்று விடுகிறான். இன்டர்நெட் எத்தகையது எனில், அதில் பல்வேறு நிகழ்ச்சிகள் உள்ளன. பிறகு ஹயீயீடைஉயவடிைளே உள்ளன. போன் மூலமாகவும் ஐபேடு மூலமாகவும் அவனை சோதனையில் இட்டுக் கொண்டே செல்கிறான்.

தவறான பொழுதுபோக்கு மற்றும் எல்லா விதமான வீணான விஷயங்களிலிருந்தும் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்தும் தப்பிப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ள ஒரு திரண்ட துஆவை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

அல்லாஹ் நமக்கு M.T.A -வை வழங்கி இருக்கின்றான். அல்லாஹ் நமக்கு ஜமாஅத்தின் அறிவு மற்றும் ஆன்மீக நிகழ்ச்சிகளுக்காக இணைதளத்தையும் வழங்கியுள்ளான். நாம் நமது கவனத்தை அதிகமாக இதன் பக்கம் செலுத்தினால் பிறகு அல்லாஹ்வை நெருங்குவதன் பக்கம் கவனம் இருக்கும். ஷய்த்தானிடமிருந்தும் நம்மை விலக்குவதாக அது இருக்கும்.

வீட்டிலுள்ள அனைவரும் அமர்ந்து குறைந்தபட்சம் வாரம் ஒரு முறை M.T.A -வில் குத்பாவை கேளுங்கள். இதை கண்டிப்பாக செய்ய வேண்டும். இது தவிர குறைந்தபட்சம் தினமும் ஒரு மணி நேரம் M.T.A -வில் நிகழ்ச்சிகளை பாருங்கள். எந்த வீடுகளில் இவ்வாறு செய்யப்படுகிறதோ அல்லாஹ்வின் அருளால் அந்த வீடு முழுவதும் மார்க்கத்தின் பக்கம் சாய்ந்திருப்பதைக் காண முடிகிறது. பிள்ளைகளும் கற்கிறார்கள். பெரியவரும் கற்கிறார்கள். இதன்படி செயல்பட்டால் நிச்சயமாக இதனால் மார்க்கப் பயன் ஏற்படுகின்ற அதே வேளையில் ஷய்த்தானிடமிருந்து விலகவும் முடிகிறது.

ஜமாஅத் அமைப்பும் குறிப்பாக கிளை அமைப்புகளும் அதன் உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்கும் ஜமாஅத்துடன் வலுவாக அவர்களை இணைப்பதற்கும் செயலளவில் செய்ய வேண்டிய முயற்சிகள் தொடர்பாக ஹுஸூர் அவர்கள் வழிகாட்டியிருப்பதுடன் அது தொடர்பாக அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ள போதனைகள்.

பொறுப்பாளர்கள் தமது நடைமுறைகளை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் எனில் அன்புடன் அவர்களை மார்க்கத்துடன் இணைக்க வேண்டும். பள்ளிவாயிலுடன் இணைக்க வேண்டும். தமது மஜ்லிஸுடன் இணைக்க வேண்டும். ஜமாஅத்துடன் இணையுங்கள். அதுவன்றி, எங்கு ஒரு பலவீனம் ஏற்படும்? எங்கு ஏதாவது ஒரு பொறுப்பாளர் பற்றி புகார் எழும்? அங்கு நாம் தாக்குதல் தொடுத்து அவர்களை நமது கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம் என்று ஷய்த்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

இதுபோன்று குறிப்பாக எவரிடம் மார்க்கப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அவர்கள் ஜமாஅத் மக்களுக்கு வழிகாட்டும் பொறுப்பில் இருப்பவர்கள் தமது சொல்லையும் செயலையும் இறைவனது திருப்திக்கு ஏற்ப அமைக்க வேண்டும்.அல்லாஹ் அவர்களின் காரணத்தால் எவரையும் ஷய்த்தானின் பிடியில் மாட்ட விட்டு விடக் கூடாது என்பதற்காக அல்லாஹ்விடம் தூய்மையான கலப்பற்ற நிலையில் துஆ செய்யுங்கள். மாறாக, எவ்வகையிலும் எந்த ஜமாஅத் நபரும் ஷய்த்தானுக்குப் பின்னால் செல்பவராக இருக்கக் கூடாது.

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **சுவீடனின் கோட்டான் பார்க்கிலுள்ள மஸ்ஜித் நாஸிர் பள்ளிவாயிலில் 20 மே 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு ஹிஜ்ரத் மாதம் 20 -ஆம் தேதி ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ۔

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ۔ الرَّحْمٰنِ الرَّحِيمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّينِ۔ إِيَّاكَ نَعْبُدُ وَ إِيَّاكَ نَسْتَعِينُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ۔ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ۔

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّبِعُوْا خُطُوٰتِ الشَّيْطٰنِ۔ وَمَنْ يَّتَّبِعْ خُطُوٰتِ الشَّيْطٰنِ فَاِنَّهٗ يَاْمُرُ بِالْفَحْشَآءِ وَالْمُنْكَرِ۔ وَلَوْلَا فَضْلُ اللّٰهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهٗ مَا زَكٰى مِنْكُمْ مِّنْ اَحَدٍ اَبَدًا وَّلٰكِنَّ اللّٰهَ يُزَكِّيْ مَنْ يَّشَآءُ۔ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ

நம்பிக்கை கொண்டவர்களே! ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். எவர் ஷய்த்தானின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறாரோ அவரை வெட்கங் கெட்ட தீய செயல்களைச் செய்யுமாறு அவன் கட்டளையிடுகிறான். அல்லாஹ்வின் கருணையும் அருளும் உங்கள் மீது இல்லா விட்டால் உங்களில் ஒருவர் தூய்மை அடைய முடியாது. ஆனால், அல்லாஹ் யாரை விரும்புகிறானோ அவரை தூய்மையாக்குகிறான். அல்லாஹ் நன்கு கேட்பவனும் நிரந்தரமான அறிவு கொண்டவனும் ஆவான். (24:22)

அல்லாஹ் இந்த வசனத்தை தவிர வேறு இடங்களிலும் மனித குலத்தை ஷய்த்தானிடமிருந்து தப்பிக்கவும் அவனது அடிச்சுவட்டில் செல்லாமல் இருக்கவும் எச்சரிக்கை செய்கிறான். ஷய்த்தான் இறைவனுக்கு கட்டுப்படுவதில்லை என்பதால் இந்தக் கட்டளையிடப்பட்டுள்ளது. அவன் அல்லாஹ்வின் கட்டளைக்கு மாறு செய்கிறான். அவனுடன் பகைமை கொள்கிறான். இறைவனுக்கு கட்டுப்படாமல் அவனது கட்டளைக்கு மாறு செய்பவன் தன்னைப் பின்பற்றுபவரையும் தான் செய்வதனப்படியே நடத்துவான் என்பது வெளிப்படையாகும்.

பிறகு அதன் விளைவாக ஷய்த்தான் தானும் நரகத்தின் விறகாகி தன்னைப் பின்பற்றுபவர்களையும் நரகத்தின் விறகாக்கி விடுகிறான். உன்னைப் பின்பற்றுபவர்களைக் கொண்டு நரகத்தை நிரப்புவேன்; அவர்களது தங்குமிடம் நரகமாக இருக்கும். என்று அல்லாஹ் வெளிப்படையாக ஷய்த்தானிடம் கூறுகிறான்.

இவை அனைத்தையும் தெளிவாக விளக்கியவாறு அல்லாஹ் கூறுகிறான்: ஷய்த்தான் உங்களுக்கு பகிரங்கமான எதிரியாவான். இதற்குப் பிறகும்

மனிதனுக்குப் புரியவில்லையா? எனவே, இந்த பகைவனிடமிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். மார்க்கத்தை சிறிதும் பொருட்படுத்தாதவர்கள் இருக்கிறார்கள். அவர்களுகு நரகம் என்றால் என்னவென்றும் தெரியாது. சொர்க்கம் என்றால் என்னவென்று தெரியாது. அவர்களுக்கு இறைவனது இருப்பு குறித்தும் நிச்சய உறுதி இல்லை அல்லது மார்க்க விவகாரங்களை அவர்கள் புரிவதும் இல்லை. புரிய விரும்புவதும் இல்லை. இந்த நாடுகளில் இஸ்லாம் பற்றி சிலர் படிக்கிறார்கள் என்றாலும் அறிவு என்ற அளவில் மட்டும் படிக்கிறார்கள் அல்லது எங்களுக்கு மார்க்கம் அல்லது இஸ்லாம் பற்றி தெரியும் என்று கூறுவதற்காக படிக்கின்றனர். அவர்களுடைய அறிவு மேலெழுந்தவாரியாகவும் புத்தக அளவிலும் இருக்கும்.

சிலர் இவ்வாறும் இருக்கிறார்கள். ஆட்சேபனை அல்லது குறை காணும் கண்ணோட்டத்தில் குர்ஆனை படிக்கின்றனர். இஸ்லாம் பற்றி தெரிந்து வைக்கிறார்கள். ஆனால், இந்த போதனை மற்றும் சிறப்பு குறித்து சிறிதும் பாடம் கற்பதில்லை. ஷய்த்தானின் ஆதிக்கத்திலிருந்து வெளியே வருவதும் இல்லை. இறைவனைப் பற்றிய தேட்டம் அவர்களுக்கு இல்லை. மேலும் அந்த தேடுதலில் ஆர்வமும் கொண்டிருப்பதில்லை. அத்தகைய மக்களும் ஷய்த்தானின் பின்னால் செல்பவர்கள்தான். ஆனால், சிலர் இவ்வாறும் இருக்கிறார்கள். ஈமான் கொண்டதாக வாதித்துக் கொண்டு தம்மை நம்பிக்கையாளர் என்று கூறிக் கொண்டு பிறகும் ஷய்த்தானின் பின்னால் செல்பவர்களாக அவர்கள் இருக்கின்றனர் அல்லது தம்மை அறியாமல் சில செயல்களைச் செய்து அல்லது அல்லாஹ்வின் அணைப்பில் வருவதற்கு முழுமையான முயற்சி செய்யாமல் ஷய்த்தானின் அடிச்சுவட்டில் செல்பவர்கள் ஆகின்றனர் அல்லது அவ்வாறு அவர்கள் ஆக முடியும். எனவே, அல்லாஹ் இந்த வசனத்தில் நம்பிக்கையாளர்களை ஷய்த்தானின் அடிச்சுவட்டில் செல்லாதீர்கள் என்று எச்சரிக்கின்றான்.

நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம். நாம் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டோம். எனவே, நாம் கவலையிலிருந்து விடுபட்டு விட்டோம் என்று கருதாதீர்கள். ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து ஷய்த்தானைப் பின்பற்றுவதிலிருந்தும் கவலையற்றவர்கள் என்று அவர்கள் தம்மைப் பற்றி கருதுகிறார்கள். அல்லாஹ் கூறுகிறான்: ஒரு நம்பிக்கையாளரும் கூட ஒரு நம்பிக்கையாளரல்லாதவர் போன்றே ஷய்த்தானின் பிடியில் வர முடியும். ஷய்த்தானின் ஆபத்து அதனைப் போன்றதுதான். எனவே, ஒவ்வொரு நம்பிக்கை கொண்டவரது கடமை என்னவெனில் ஷய்த்தானிலிருந்து தப்பிப்பதற்கு எப்போதும் அல்லாஹ்வை நினைவில் கொள்ள வேண்டும். ஷய்த்தான் முதல் நாளிலிருந்து மனிதனை நல்வழியிலிருந்து விலக்குவதற்கு அல்லாஹ்விடம் அனுமதி வாங்கி இருக்கிறான். அதுவும் இவ்வாறு வாதிட்டு அனுமதி வாங்கினான். எனக்கு மனிதனை குழப்புவதற்கும் என்னை பின்தொடர வைப்பதற்கும் வாய்ப்பு கிடைத்தால் ஒவ்வொரு வழியிலும் அமர்ந்து அவனை குழப்புவேன். பல்வேறு சாக்குப்போக்குகளால் அவனை என்னைப் பின்தொடரச் செய்வேன். பெரும்பாலான மக்கள் என்னைப் பின்பற்றுவார்கள் என்று ஷய்த்தான் வாதிட்டான். எனவே, இவை அனைத்தையும் உலகில் நடக்கக் காண்கிறோம். எந்த அளவுக்கு எனில் அல்லாஹ் எச்சரிக்கை செய்திருந்தும் நம்பிக்கை கொண்டதாக வாதிப்பவர் கூட ஷய்த்தானின் பின்னால் செல்கிறார்கள் என்பது தெரிகின்றது.

உதாரணமாக, திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

وَمَنْ يَّقْتُلْ مُؤْمِنًا مُّتَعَمِّدًا فَجَزَآؤُهٗ جَهَنَّمُ *வமன் யக்துல் முஃமினன் முதஅம்மிதன் வஜஸாவுஹூ ஜஹன்னம்* – ஒருவர் ஒரு நம்பிக்கையாளரை வேண்டுமென்றே கொலை செய்து விட்டால் அவருக்கு தண்டனை நரகமாக இருக்கும். தற்போது முஸ்லிம் உலகில் நடப்பதெல்லாம் என்ன? ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு ஷய்த்தானின் பின்னால் போகின்றனர். பிறகு நிர்பந்தத்தினாலும் அனுமதியின்றி தீவிரவாதிகள் பல்வேறு தாக்குதல்கள் மூலம் தாக்குதல் தொடுக்கின்றனர். எவரையாவது கொல்கின்றனர். இவை அனைத்தும் ஷய்த்தானிய செயல்கள் ஆகும். நரகத்தின் பக்கம் எடுத்துச் செல்பவையாகும். ஷய்த்தானில் ஏமாற்றத்திற்குள்ளாகி சொர்க்கத்திற்குச் செல்வது என்ற பெயரால் இவை அனைத்தும் செய்யப்படுகின்றன. இந்த வேலையைச் செய்; சொர்க்கத்திற்குச் செல் என்று ஷய்த்தான் கூறுகிறான்.

அல்லாஹ் கூறுகிறான்: இந்த வேலையைச் செய்தால் நீங்கள் சொர்க்கத்திற்குப் போக மாட்டீர்கள். நரகத்திற்குத்தான் போவீர்கள். ஏனெனில் நீங்கள் ஷய்த்தானுக்குப் பின்னால் போகிறீர்கள். எனவே, அல்லாஹ் நம்பிக்கை கொண்டவரிடம் கூறுகிறான். உங்கள் மீது எப்போதும் பார்வையை வைத்திருங்கள். ஷய்த்தானின் அடிச்சுவட்டில் நாம் செல்லவில்லையே என்று பார்த்துக் கொண்டிருங்கள் என்று கூறுகின்றான். சிறிய சிறிய விஷயங்களை மறுத்து ஷய்த்தானின் அடிச்சுவட்டில் செல்கிறீர்களா? அல்லது பெரும் பெரும் பாவம் செய்தவாறு ஷய்த்தானின் பின்னால் போகிறீர்களா? என்று பார்க்க வேண்டும்.

தீவிரவாதிகளான கொலைகாரர்கள் மட்டும் தான் ஷய்த்தானின் பின்னால் போவார்கள் என்பதன்று. அதற்கு உதாரணம் நான் தந்தேன். மாறாக, மனிதன் வெளிப்படையாக சின்னஞ்சிறு கட்டளையை விட்டு விலகினாலும் ஷய்த்தான் பக்கமே போகிறான். எனவே, அதிகமாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உண்மையான நம்பிக்கை கொண்டவராக ஆவதற்கு அதிக அளவில் எச்சரிக்கை தேவையாகும். ஷய்த்தான் தாக்குதல் தொடுக்கும்போது, மனிதனை குழப்பும்போது மனிதன் அதனை எளிதாகப் புரிந்து கொள்ளத்தக்க அளவில் அவனது வழிமுறை இருப்பதில்லை அல்லது ஷய்த்தான் மனிதனை குழப்பும்போது தீமையின் பக்கம் தூண்டும் போது அல்லாஹ்வுடைய கட்டளைக்குக் கட்டுப்படாமையின் பக்கம் எடுத்துச் செல்லும்போது வெளிப்படையாக இவ்வாறு செய்; கட்டுப்படாதே! அல்லாஹ்வை விட்டு விலகி இன்ன தீமையை செய் என்று கூறமாட்டேன். மாறாக, நன்மையின் போர்வையில் தீமையின் பக்கம் எடுத்துச் செல்கிறான். ஆதமுக்கும் கூட கட்டளையை விட்டு விலகுமாறு ஷய்த்தான் கூறிய போதும் நன்மையைச் சான்று காட்டியே விலக்கினான். நான் ஓதிய வசனம் இதன் பக்கம் ஒளியூட்டுகிறது. தீமைகள் எவ்வாறு பரவுகின்றன என்று காட்டுகிறது. மனிதன் ஷய்த்தானின் அடிச்சுவட்டில் செல்லும்போது எவ்வாறு தீமை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குப் பரவி பரவி ஒரு பரந்த பகுதியை தமது பிடியில் எடுத்துக் கொள்கிறது என்று அது காட்டுகிறது. ஓர் அடியிலிருந்து இன்னோரடி எடுத்து வைக்கிறான் என்றால் அவன் தீமையைப் பரப்புகிறான் என்று பொருள். ஆரம்பத்தில் ஒரு தீமை மிகவும் சிறியதாகத் தெரிகிறது அல்லது இந்த தீமை, தனக்கோ சமூகத்திற்கோ என்ன சேதத்தை விளைவித்து விடப் போகிறது என்று மனிதன் கருதுகிறான். ஆனால், அது பரந்த வட்டத்தில் பரவும் போது அல்லது பெருமளவில் மக்கள் அத்தீமையைச் செய்யத் தொடங்கும்போது அல்லது அதிலிருந்து கண்களை மூடிக் கொள்கின்றனர் அல்லது சமுதாயத்தின் மீது கொண்ட பயத்தால் அதனை தீமை என்று கூற பயப்படுகிறார்கள் அல்லது தாழ்வு மனப்பான்மை கொண்டு சமுதாயத்தின் பார்வையில் நமது மதிப்பை தாழ்த்திக் கொள்ளக் கூடாது என்று கருதி மவுனமாக இருந்து விடுகின்றனர் அல்லது அந்த தீமைகளுக்கேற்ப செயல்படுவதில்லை. பெரும்பாலான காரியங்கள் சமுதாயத்தில் சுதந்திரம் என்ற பெயரால் நடக்கின்றன. அரசும் அதனை ஒப்புக் கொள்கின்றது. ஆனால், அவை தீமைகளாக இருக்கின்றன.

பிறகு இந்த சமுதாயத்தில் உதாரணமாக வெளிப்படையில் சிறிய தீமைகளாக இம்மக்களின் பார்வையில் இருப்பது பர்தா ஆகும். பர்தா என்பது பெண்களின் உரிமையைப் பறிப்பதாகக் கருதப்படுகிறது. சமுதாயத்தில் இந்த பர்தாவுக்க எதிராக நிறைய கூறப்படுகிறது. அவர்களின் பார்வையில் இது ஒன்றும் தீய காரியம் இல்லை. எனவே, இதற்கு ஷரீஅத் கட்டளை தேவையில்லை என்று கூறுகின்றனர். சில இளம் பெண்கள் தாழ்வு மனப்பான்மைக்கு இரையாகி, மக்கள் என்ன சொல்வார்கள்? அல்லது அவர்கள் நண்பர்கள் விரும்ப மாட்டார்கள் அல்லது பள்ளிக்கூடம் அல்லது கல்லூரியில் மாணவர்கள் அல்லது ஆசிரியர்கள் பர்தாவை கேலி செய்வார்கள் என்று கருதி பர்தா அணிவதில் சிரத்தை காட்டுவதில்லை. ஷய்த்தான் இது ஒரு சாதாரண விஷயம் என்று கூறுகிறான். இந்தக் கட்டளையை விட்டு விட்டு உங்கள் தூய்மையை முடிவுக்குக் கொண்டு வருவது எவ்வாறு?

சமுதாயத்தின் பேச்சிலிருந்து தப்பிப்பதற்காக உங்கள் துப்பட்டா, ஸ்கார்ஃப், நிகாப் போன்றவற்றை கழற்றி விட்டால் ஒன்றும் ஆகாது மற்ற இஸ்லாமிய காரியங்களைத்தான் செய்கின்றீர்களே? என்கிறான். ஆனால் அப்போது பர்தாவை கழற்றக்கூடிய இளம் பெண்கள் மற்றும் பெண்களுக்கு இந்த யோசனை இருப்பதில்லை. இது எத்தகைய கட்டளை எனில் இது திருக்குர்ஆனில் கூறப்பட்ட கட்டளையாகும். பெண்களின் வெட்கம் என்பது அவர்கள் வெட்கத்தைப் பேணும் வகையிலுள்ள உடையாகும். பெண்களின் தூய்மை, ஆண்களுடன் தேவையற்ற கலந்துரையாடல்களிலிருந்து தவிர்ந்து கொள்வதில் இருக்கிறது.

இந்த சமுதாயத்தில் அல்லாஹ்வின் அருளால் எத்தகைய அஹ்மதி இளம் பெண்கள் இருக்கிறார்கள் என்றால் பர்தா குறித்து ஆண்களின் ஆட்சேபனை எழும் போது அதற்கு வாயை அடைக்கும் பதிலைக் கொடுத்து விடுகின்றனர். இது எமது செயலும் விருப்பமும் ஆகும். நான் இதனை விரும்புகிறோம். நாங்கள் அணிகிறோம். நீங்கள் எமது பர்தாவை கழற்றுமாறு நிர்பந்தித்து எமது சுதந்திரத்தைப் பறிக்காதீர்கள். எமது ஆடைகளை எங்களுக்கேற்ப அணிந்து கொள்ள எங்களுக்கும் உரிமை உள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால், இவ்வாறும் சிலர் இருக்கிறார்கள். அஹ்மதியாக இருந்து கொண்டும் கூட இந்த சமூகத்தில் பர்தா அணிவதும் ஸ்கார்ப் அணிவதும் மிகவும் சிரமமாகும். எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது என்கிறார்கள். பெற்றோர்களும் கூட சிறு வயதிலிருந்து பெண்களிடம் இதனை உருவாக்க வேண்டும். அதாவது, இஸ்லாமிய போதனையை செயல்படுத்தாமல் இருப்பதால் தான் வெட்கம் வர வேண்டுமே ஒழிய இறை கட்டளையை ஒப்புக் கொள்வதில் அல்ல என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும். இவ்வாறு இளைஞர்களிடம் சமுதாய சுதந்திரத்தின் காரணமாக சில தீமைகள் மவுனமாக நுழைகின்றன. சில பையன்கள் சில தீமைகளால் பீடிக்கப் –படுகின்றனர். பிறகு மற்ற தீமைகளும் அவர்களிடம் வரத் தொடங்குகின்றன. அதனாலும் பீடிக்கத் தொடங்குகின்றனர். எனவே, ஷய்த்தானிடமிருந்து

தப்பிப்பதற்கு வீடுகளிலேயே அத்தகைய ஒரு சூழலை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. அவனது ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் தப்பிப்பது மட்டுமின்றி அவனது தாக்குதலுக்குப் பதிலும் கொடுக்க வேண்டும்.

ஷய்த்தானின் அன்பை அன்பு என்று கருதி அவனை உங்கள் வாழ்வில் நுழைய விடாதீர்கள். மாறாக, எப்போதும் இஸ்திக்ஃபார் செய்தவாறு அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வருவதற்கு ஒவ்வோர் அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். ஷய்த்தானிடமிருந்து தப்பிக்க மிகப் பெரும் அடைக்கலம் அல்லாஹ்வே ஆவான். எனவே, இந்த வழிகெட்ட காலத்தில் இஸ்திக்ஃபார் செய்தவாறு அல்லாஹ்வின் அடைக்கலத்தில் வர முயற்சி செய்ய வேண்டும். இஸ்திக்ஃபார் செய்வதன் மூலம் மனிதன் அல்லாஹ்வின் அடைக்கலத்திற்குள் வர முடியும். எந்த மனிதனும் தெரிந்து கொண்டே எந்த தீமையின் பக்கமும் செல்ல மாட்டான். இதனால் நஷ்டம் தான் ஏற்படும் என்று தெரிந்து கொண்டே மனிதன் அதனைச் செய்ய முயற்சிப்பது இயல்புக்கு மாற்றமானது. ஓர் உண்மையான நம்பிக்கை கொண்டவருக்கு அல்லாஹ் நன்மையையும் தீமையையும் தெளிவாகக் கூறி விட்டான். நன்மை தீமைகளைப் பற்றி அல்லாஹ்வின் போதனைக்கேற்ப அவற்றைத் தேடியவாறு செய்யவும் விலகவும் மனிதன் முயற்சி செய்ய வேண்டும். எதுவரை மனிதன் இறைவனது அடைக்கலத்தில் இருப்பானோ அவனை சார்ந்திருப்பானோ அதுவரை அவனுக்கு நஷ்டம் விளைவிக்க இயலாது என்பது ஷயத்தானுக்கு தெரியும்.

எனவே, ஷய்த்தான் மனிதனை இந்த அடைக்கலத்திலிருந்து வெளியேற்றி மனிதன் பாதுகாப்புடன் இருக்கும் கோட்டையிலிருந்து அவனை வெளியேற்றி பிறகு அவனை தன் பின்னால் வர வைக்கிறான். அல்லாஹ்வின் அடைக்கலத்திலிருந்து வெளியேற்றுவதற்கு முதலில் ஷய்த்தான் மனிதனுக்கு நன்மையின் ஆசையைக் காட்டியவாறு வெளியேற்றுகிறான். நன்மையின் ஆசையைக் காட்டியவாறு ஒரு நம்பிக்கை கொண்டவரை அல்லாஹ்வின் அடைக்கலத்திலிருந்து வெளியேற்றவும் முடியும். சில வேளை மனிதன் நன்மையின் பெயரில் மனிதனின் மீது அனுதாபம் காட்டும் பெயரில் – மற்றவருக்கு உதவி செய்வதன் பெயரில் ஆணுக்கும் பெண்ணுக்கும் அறிமுகம் ஏற்படுகிறது. சில வேளை இது தீய விளைவிற்குக் காரணமாகிறது. எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கணவன் வீட்டில் இல்லாத போது ஒரு பெண்ணைப் பார்க்க வீட்டிற்குச் செல்வதைத் தடை செய்துள்ளார்கள். இதற்கு காரணம் ஷய்த்தான் மனிதனது நரம்புகளில் இரத்தம் போன்று ஓடுகிறான். (சுனன் திர்மிதி. கிதாபுர் ரிழாா பாபு மாஜாஅ ∴பீ கராஹியத்தித் வஹுலி அலல் முன்ஹியாத், ஹதீஸ் எண்.1172) இந்தக் கட்டளையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் அடிப்படை விதியைக் கட்டளையாகக் கூறியுள்ளார்கள். அந்நிய ஆண்களுடன் ஒருபோதும் சுதந்திரமாகப் பெண்கள் இணைந்திருக்கக் கூடாது. ஏனெனில் இதனால் ஷய்த்தானுக்கு தனது வேலையைச் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்து விடுகிறது.

எனவே, சுதந்திரம் என்ற பெயரில் இளம் பெண்கள், இளைஞர்களை சந்தித்தல், தனியாக சந்தித்தல் தவறாகக் கருதப்படாத நிலையில் இங்கு இந்த சமூகத்தில் அஹ்மதிகள் குறிப்பாக எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும். பிறகு அறிவற்ற ஆண்கள் பெண்களால் மட்டுமே தீமைகள் பரவுவதில்லை. மாறாக, இதுவும் காணக் கிடைக்கிறது. திருமணமானவர்கள் கூட சுதந்திரம் மற்றும் நட்பு என்ற பெயரில் வீடுகளுக்குள் வந்து போவது எந்தத் தடையுமின்றி பழகுவது பிரச்சனைகளை உருவாக்குகிறது. நாளடைவில் அந்த குடும்பங்கள் சீரழிந்து விடுகின்றன. எனவே, நமக்கு இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளும் பேருபகாரத்தை வழங்கியுள்ளான். இஸ்லாத்தின் ஒவ்வொரு கட்டளையின் ஞானத்தையும் நமக்கு புரிய வைத்துள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய ஒவ்வொரு கட்டளையையும் எந்தக் கேள்வியோ மறுப்போ இன்றி செயல்படுத்த வேண்டும். இது நமது கடமையாகும்.

இன்றைய காலத் தீமைகளில் டி.வி. உள்ளது. இன்டர்நெட் உள்ளது. இன்னும் சில தீமைகளும் உள்ளன. பெரும்பாலான தீமைகளை ஆய்வு செய்தால் பெரியவரிலிருந்து சிறியவர் வரை ஃபஜ்ர் தொழுகையை நேரத்தில் தொழாததற்குக் காரணம் இரவில் நீண்ட நேரம் டி.வி. பார்த்துக் கொண்டிருப்பது அல்லது இன்டர்நெட்டில் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பதாகும். இதன் விளைவாக அதிகாலையில் கண்கள் திறப்பதில்லை. இன்னும் சொல்வதாயின், அத்தகைய மக்களுக்கு அதிகாலை தொழுகைக்காக எழ வேண்டும் என்ற கவனமே இருப்பதில்லை. இவ்விரண்டும் அல்லது இதுபோன்ற வீணானவைகள் எத்தகையவை எனில் அவை ஓரிரு முறை தொழுகைகளை வீணாக்குவதில்லை. மாறாக, அவர்களுக்கு பழக்கமாகி விட்டால் தினந்தோறும் இதுவே நடைமுறையாகிறது. இரவு வெகு நேரம் டி.வி. பார்த்துக் கொண்டே இருப்பர் அல்லது இன்டர்நெட்டில் உட்கார்ந்திருப்பர். காலையில் தொழுகைக்காக எழுவது அவர்களுக்கு சிரமமாகி விடும். இன்னும் சொல்வதாயின், எழவே மாட்டார்கள். இன்னும் சிலர் இருக்கிறார்கள். தொழுகைக்கு எந்த முக்கியத்துவமும் தருவதில்லை. தொழுகை ஓர் அடிப்படை விஷயமாகும். அதனை நிறைவேற்றுவது எல்லா நிலையிலும் அவசியமாகும். எந்த அளவுக்கு என்றால் போர் மற்றும் துன்பம் அல்லது நோயின் நிலையிலும் கூட மனிதன் உட்கார்ந்து தொழலாம். படுத்துக் கொண்டும் தொழலாம். போர் நிலையில் அல்லது பயணத்தில் கஸர் செய்யலாம். எவ்வாறிருப்பினும் தொழ வேண்டும். பொதுவான நிலைமைகளில் ஆண்கள் ஜமாஅத்துடன் தொழ வேண்டும். பெண்களும் நேரத்தில் தொழ வேண்டும் என்று கட்டளை உள்ளது.

ஆனால், ஷய்த்தான் வெறும் உலக நிகழ்ச்சியின் ஆசையைக் காட்டி தொழுகையிலிருந்து விலக்கிக் கொண்டு சென்று விடுகிறான். இன்டர்நெட் எத்தகையது எனில், அதில் பல்வேறு நிகழ்ச்சிகள் உள்ளன. பிறகு Applications உள்ளன. போன் மூலமாகவும் ஐபேடு மூலமாகவும் அவனை சோதனையில் இட்டுக் கொண்டே செல்கிறான். முதலில் அவற்றின் மூலம் நல்ல நிகழ்ச்சிகள் பார்க்கப்படுகின்றன. எவ்வாறு அவனது ஈர்ப்பு உள்ளது? முதலில் நல்ல நிகழ்ச்சிகள் பார்க்கப்படுகிறது. பிறகு ஒவ்வோர் அசுத்தமானதும் நல்லொழுக்கத்தை நாசமாக்கவதுமான நிகழ்ச்சிகள் அதன் மூலம் பார்க்கப்படுகிறது. பல வீடுகளில் நிம்மதியின்மைக்குக் காரணம் மனைவியின் உரிமை தரப்படுவதில்லை. குழந்தைகளின் உரிமையும் தரப்படுவதில்லை. காரணம், இரவில் ஆண்கள் இன்டர்நெட் மற்றும் டி.வி மூலமாக வீணான நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் மூழ்கி விடுகின்றனர். அத்தகைய வீடுகளிலுள்ள குழந்தைகளும் அதே சாயலுக்கு உள்ளாகின்றனர். அவற்றையே அவர்களும் பார்க்கின்றனர்.

எனவே, ஓர் அஹ்மதி வீடு இந்த எல்லா தீமைகளிலிருந்து விலக முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒரு நம்பிக்கையாளரை ஷய்த்தானின் தாக்குதலிலிருந்து காப்பாற்ற எவ்வளவு கவலை இருந்தது? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறு தமது சஹாபாக்களை ஷய்த்தானிடமிருந்து தப்பிக்க துஆ கற்றுத் தந்தார்கள். எவ்வாறு ஒரு திரண்ட துஆவை கற்றுத் தந்தார்கள். இதனை ஒரு சஹாபி இவ்வாறு விளக்குகிறார்.

அன்னார் எங்களுக்கு ஒரு துஆவைக் கற்றுத் தந்தார்கள். அல்லாஹ்வே! எமது உள்ளத்தில் அன்பை உருவாக்குவாயாக! எங்களை சீர்திருத்துவாயாக! எம்மை அமைதியின் வழியில் நடத்துவாயாக! எம்மை இருளிலிருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் கொண்டு செல்வாயாக! எம்மை வெளிப்படையான மறைமுகமான தீமைகளிலிருந்து காப்பாற்றுவாயாக! எமது கண்கள் காதுகளில் அதே போன்று எனது மனைவி மக்களில் பரக்கதை வைப்பாயாக! எம் மீது கருணையுடன் திரும்புவாயாக! நிச்சயமாக நீயே தவ்பாவை ஒப்புக் கொள்பவனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாவாய். எம்மை உமது அருள்களுக்கு நன்றி செலுத்துபவர்களாகவும் அவற்றின் நன்மைகளைக் கூறுபவர்களாவும் அதனை ஏற்பவராகவும் ஆக்குவாயாக! அல்லாஹ்வே! எம்மீது அருள்களை முழுமைப் –படுத்துவாயாக! (சுனன் அபூதாவூது. கிதாபுஸ் ஸலாத் பாபு தஷஹ்ஹுது, ஹதீஸ் எண்.969)

ஆக, இது உலகின் தவறான சந்தோஷங்களிலிருந்து தப்பிப்பதற்கும் எல்லா வகையான தீமைகளிலிருந்து தப்பிக்கவும் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிக்கவும் செய்ய வேண்டிய துஆவாகும். இன்று கூட உலகில் மகிழ்ச்சியின் பெயரால் பல்வேறு வீணான காரியங்கள் நடக்கின்றன. மனிதன் காதுகள் மற்றும் கண்களின் பரக்கதிற்காக துஆ செய்யும் போது அமைதியைப் பெறவும் இருளிலிருந்து ஒளியின் பக்கம் செல்ல முயற்சியும் செய்யும் போது மனைவியின் உரிமையை நிறைவேற்ற துஆ செய்யும்போது, சந்ததிகள் கண்களின் குளிர்ச்சிக்கு காரணமானவர்களாக ஆக துஆ செய்யும்போது பிறகு வீணான, தீய மகிழ்ச்சிகளின் பக்கம் இருந்து தன்னாலேயே கவனமும் விலகி விடும். இவ்வாறு முழு வீட்டையும் ஷய்த்தானிடமிருந்து விலக்கி வைப்பதற்குரிய ஒரு காரணியாக ஒரு நம்பிக்கை கொண்டவர் ஆகி விடுகிறார். ஆகவே, எந்த காலக்கட்டத்தில் நாம் சென்று கொண்டிருக்கிறோமோ அது ஏதோவொரு நாட்டின் விவகாரமல்ல. மாறாக, முழு உலகின் நிலையும் இதுதான்.

ஊடகங்கள் நம்மை ஒருவரையொருவர் அருகில் கொண்டு வந்து விட்டது. துரதிஷ்டவசமாக நன்மைக்கு அருகில் கொண்டு வருவதற்குப் பதில் ஷய்த்தானுக்குப் பின்னால் செல்வதில் மிக அருகில் கொண்டு வந்து விட்டது. அத்தகைய நிலையில் ஓர் அஹ்மதிக்கு மிக அதிகமாக முன்னரை விட அதிகமாக தனது நிலையின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். அல்லாஹ் நமக்கு M.T.A. –வை வழங்கி இருக்கின்றான். அல்லாஹ் நமக்கு ஜமாஅத்தின் அறிவு மற்றும் ஆன்மீக நிகழ்ச்சிகளுக்காக இணைதளத்தையும் வழங்கியுள்ளான். நாம் நமது கவனத்தை அதிகமாக இதன் பக்கம் செலுத்தினால் பிறகு அல்லாஹ்வை நெருங்குவதன் பக்கம் கவனம் இருக்கும். ஷய்த்தானிடமிருந்தும் நம்மை விலக்குவதாக அது இருக்கும். சந்தோஷத்திற்காக பிற டி.வி. சேனல்கள் பார்ப்பதாயினும் கூட இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பெற்றோர் தாமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பிள்ளைகளையும் கண்காணிக்க வேண்டும். பிறகு நல்ல ஒழுக்கமான நிகழ்ச்சிகளைக் காணுங்கள். அசுத்தமும் வீணானவையும் எங்கிருந்தாலும் அதிலிருந்து தப்பித்துக்

கொள்ளுங்கள். இது வெறும் வெட்கமின்மை, அதிருப்திக்குரிய விஷயங்களின் பக்கமே எடுத்துச் செல்கின்றது. அல்லாஹ்விடமிருந்து இடைவெளியை உருவாக்குகின்றது.

ஆனால், இத்தகைய விஷயங்களிலிருந்து ஓர் அஹ்மதி வீடு கண்டிப்பாக தவிர்ந்திருக்க வேண்டும். வீட்டிலுள்ள அனைவரும் அமர்ந்து குறைந்தபட்சம் வாரம் ஒரு முறை M.T.A. –வில் குத்பாவை கேளுங்கள். இதை கண்டிப்பாக செய்ய வேண்டும். இது தவிர குறைந்தபட்சம் தினமும் ஒரு மணி நேரம் M.T.A. –வில் நிகழ்ச்சிகளை பாருங்கள். எந்த வீடுகளில் இவ்வாறு செய்யப்படுகிறதோ அல்லாஹ்வின் அருளால் அந்த வீடு முழுவதும் மார்க்கத்தின் பக்கம் சாய்ந்திருப்பதைக் காண முடிகிறது. பிள்ளைகளும் கற்கிறார்கள். பெரியவரும் கற்கிறார்கள். இதன்படி செயல்பட்டால் நிச்சயமாக இதனால் மார்க்கப் பயன் ஏற்படுகின்ற அதே வேளையில் ஷய்த்தானிடமிருந்து விலகவும் முடிகிறது. பிள்ளைகளும் கற்கிறார்கள். அல்லாஹ்வுடைய நெருக்கத்தை பெறுவதன் பக்கம் கவனம் ஏற்படுகிறது. வீடுகளுக்கு இதனால் அமைதியும் கிடைக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் துஆவில் கற்றுத் தந்தது போன்று இதில் பரக்கத்தும் உருவாகும்.

ஒரு தாய் எனக்கு இவ்வாறு எழுதியிருந்தார்: எனது மகன் 17 வயது வரை நன்றாகத்தான் இருந்தான். தொழுகை போன்றவற்றை பேணி வந்தான். மஜ்லிஸ் வேலைகளில் மகிழ்ச்சியுடன் பங்கு பெற்றான். ஆனால், பெரியவனானதும் அவனுக்கு சிறிது சுதந்திரம் கிடைத்ததும் அவனது நண்பர்களின் காரணத்தால் மார்க்கத்தை விட்டு முற்றிலும் விலகி விட்டான்.

அந்த வயதில் பையன்களுக்கு சுற்றுப்புறத்தின் தாக்கம் ஏற்படுகிறது என்பது சரிதான். ஆனால், பெற்றோருக்கு பிள்ளைகளுடன் நட்புரீதியான தொடர்பு இருந்தால் நல்லது கெட்டதை வித்தியாசப்படுத்திக் கூறினால் வீட்டு சூழ்நிலையை மார்க்கச் சூழலாக மாற்றினால் நான் இப்போது கூறியதுபோன்று எந்த உலகியல் ரீதியாக மகிழ்ச்சிக்கான சாதனங்கள் தரப்பட்டுள்ளதோ அதே மகிழ்ச்சிக்கான சாதனங்கள் மூலமாகவே தர்பியத்திற்கான ஏற்பாட்டையும் இறைவன் ஏற்படுத்தியுள்ளான். இவையனைத்தையும் ஒன்றாக அமர்ந்து பார்க்கும்போது அதிலிருந்து பயனடையும்போது பிள்ளைகளுக்கும் ஓர் உணர்வு ஏற்படும். வீட்டில் அந்த பிள்ளைகளுக்கு முக்கியத்துவம் இருக்கும்போது அவர்கள் வெளியில் செல்லமாட்டார்கள். வீணானவற்றில் ஈடுபடவும் மாட்டார்கள். வெளியில் அமைதியைத் தேட மாட்டார்கள். மாறாக, தமது வீட்டிலேயே அமைதியை பார்ப்பார்கள். பிறகு பெற்றோர்களுக்கு இதுவும் கடமையாகும். பிள்ளைகளைப் பள்ளிவாயிலுடன் இணைக்க வேண்டும். கிளை அமைப்புகளின் நிகழ்ச்சிகளில் இணையுங்கள். இங்கு நான், கிளை அமைப்புகளிடமும் கூறுவேன்; ஜமாஅத் அமைப்பிடமும் கூறுவேன்; குறிப்பாக கிளை அமைப்புகளிடம் கூறுவேன். காரணம், அவர்கள் தமது உறுப்பினர்களைப் பராமரிக்க வேண்டியுள்ளது. ஒவ்வொருவரையும் ஒரு குறிப்பிட்ட வட்டத்தில் வைத்து எளிதாக பாரமரிக்க முடியும். குத்தாம் குத்தாமைப் பராமரிக்க வேண்டும். லஜ்னாவை லஜ்னா பராமரிக்க வேண்டும். குறிப்பாக அத்ஃபால் மற்றும் இளைய குத்தாம்களைப் பராமரிப்பது அவசியமாகும். நாஸிராத் மற்றும் இளம் பெண்களைப் பராமரிப்பதும் அவசியமாகும். இது கிளை அமைப்புகளின் பெரும் பொறுப்பாகும். அவர்களை ஜமாஅத்துடன் உறுதியாக இணையுங்கள்.

குத்தாம்கள் ஒரு குத்தாம் குழுவை உருவாக்க வேண்டும். அது பல்வேறு இயல்புள்ளவர்களை இளைஞர்களை இணைப்பதாக இருக்க வேண்டும். ஆனால், அதிகமான புகார்கள் இளம் பெண்கள் பற்றி இருக்கிறது. லஜ்னா அமைப்பில் 15 வயதிற்குப் பிறகு எல்லா சிறுமிகளும் லஜ்னாவில் இணைகின்றனர். ஒரேயொரு அமைப்புதான். சில பெரிய வயது பெண்கள் சிறுமிகளுடன் எவ்வாறு நடக்கிறார்கள் என்றால் அது குறிப்பாக பொறுப்பாளர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்றால், அவர்களது செயல்கள் மார்க்கதத்திலிருந்து விலக்கா விட்டாலும் மஜ்லிஸின் நிகழ்ச்சிகளிலிருந்து சிலரை நிச்சயமாக விலக்கி விடுகின்றன. பொறுப்பாளர்கள் தமது நடைமுறைகளை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் எனில் அன்புடன் அவர்களை மார்க்கத்துடன் இணைக்க வேண்டும். பள்ளிவாயிலுடன் இணைக்க வேண்டும். தமது மஜ்லிஸுடன் இணைக்க வேண்டும். ஜமாஅத்துடன் இணையுங்கள். அதுவன்றி, எங்கு ஒரு பலவீனம் ஏற்படும்? எங்கு ஏதாவது ஒரு பொறுப்பாளர் பற்றி புகார் எழும்? அங்கு நாம் தாக்குதல் தொடுத்து அவர்களை நமது கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம் என்று ஷய்த்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றான். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஒப்புக் கொண்டுள்ளோம். இதன் காரணமாக இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக ஷய்த்தானுடன் கடைசி யுத்தம் உள்ளது. ஆனால், நாம் நமது செயல் மூலமாக ஷய்த்தானுக்கு வாய்ப்பு கொடுத்தோம் என்றால் நாம் நமது பிள்ளைகள், இளைஞர்களுக்கு பொறுப்பாளர்களின் நடத்தை காரணமாக ஷய்த்தான் அனுதாபம் காட்டும் வகையில் அவர்களை அவன் தனது ஆதிக்கத்தில் கொண்டு வந்து விட்டால் பிறகு அந்த பொறுப்பாளர்கள் ஆணாயினும் பெண்ணாயினும் மஸீஹே மவ்வூதின் உதவியாளர் அல்ல. பிறகு ஷய்த்தானின் உதவியாளர்கள் ஆவர். எனவே, ஒவ்வொரு பொறுப்பாளர்களும் குறிப்பாக முயற்சி செய்ய வேண்டும். தம்மையும் ஷய்த்தானின் தாக்குதலிலிருந்து தப்பிக்க வைக்க வேண்டும். ஜமாஅத்தின் மக்களையும் காப்பாற்ற வேண்டும். அல்லாஹ் இந்த அருளைத் வழங்கியுள்ளான். இதனைப் புரிவது அவசியமாகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது அவசியமாகும். இவ்வாறு ஒவ்வோர் உணர்வுள்ள அறிவுள்ள அஹ்மதிகளும் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களும் மனதில் கொள்ள வேண்டும். அல்லாஹ் அவர்கள் மீது அருள் செய்தவாறு பேருபகாரம் செய்து அவர்களை அஹ்மதிய்யத்தை ஏற்கும் வாய்ப்பினை வழங்கி அவர்களை அஹ்மதி வீடுகளில் பிறக்கச் செய்துள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்பதற்கான வாய்ப்பினை வழங்கியுள்ளான். அவரது வருகைக்கான முன்னறிவிப்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தந்துள்ளார்கள். அவர் இக்காலத்தில் ஷய்த்தானை தோல்வியடையச் செய்ய வேண்டியுள்ளது. எனவே எவரும் தனது பெயரளவிலான பெரியவர்கள் அல்லது பொறுப்பாளர்களின் நடைமுறையின் காரணத்தால் தம்மை மார்க்கத்தை விட்டு விலக்கிக் கொண்டு விட வேண்டாம். மாறாக, ஷய்த்தானுக்கு தோல்வியைத் தருவதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு உதவியாளராக வேண்டும். அதற்காக அல்லாஹ்விடம் துஆ செய்ய வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: நான் கேட்பவனும் அறிபவனும் ஆவேன். உங்களிடம் ஷய்த்தானின் தாக்குதலைப் பற்றி எவ்வளவு பயம் உள்ளது? என்று நான் அறிகிறேன். நீங்கள் அவனிடமிருந்து தப்பிப்பதற்காக முயற்சியும் துஆவும் செய்வதையும் அறிகிறேன். எனவே, நான் உங்கள் துஆவைக் கேட்டேன். நீங்கள் துஆ செய்யுங்கள். சில வேளைகளில் சூழ்நிலை உங்களுக்கு சில எண்ணங்களை உருவாக்கி விடுகிறது. அந்த சுற்றுப்புறத்திலிருந்து தப்பிக்கவும் துஆ செய்யுங்கள். அதன் மூலம் மனிதன் ஷய்த்தானுடைய சொல்லைக் கேட்கிறான். நீங்கள் ஷய்த்தானின் தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு துஆ செய்யுங்கள்.

அல்லாஹ் கூறுகிறான்: நல்ல நிய்யத்துடன் செய்யப்படும் முயற்சிகள் மற்றும் துஆக்கள் இறைவனிடத்தில் ஒப்புக் கொள்ளப்படும். நீங்கள் ஷய்த்தானிடமிருந்து பாதுகாப்பாக இருப்பீர்கள். இதுபோன்று குறிப்பாக எவரிடம் மார்க்கப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அல்லது ஜமாஅத் மக்களுக்கு வழிகாட்டும் பொறுப்பில் இருப்பவர்கள் தமது சொல்லையும் செயலையும் இறைவனது திருப்திக்கு ஏற்ப அமைக்க வேண்டும்.

அல்லாஹ் அவர்களின் காரணத்தால் எவரையும் ஷய்த்தானின் பிடியில் மாட்ட விட்டு விடக் கூடாது என்பதற்காக அல்லாஹ்விடம் தூய்மையான கலப்பற்ற நிலையில் துஆ செய்யுங்கள். மாறாக, எவ்வகையிலும் எந்த ஜமாஅத் நபரும் ஷய்த்தானுக்குப் பின்னால் செல்பவராக இருக்கக் கூடாது. அல்லாஹ் கூறுகிறான்: அவ்வாறு கலப்பற்ற முறையில் செய்யப்படும் துஆக்களை நான் கேட்பேன். உங்களுக்கும் எவர் மீது ஷய்த்தான் தாக்குதல் தொடுக்கிறானோ அவர்களுக்கும் வழிகாட்டல் தந்து கொண்டிருப்பேன். அதன் மூலம் அவனது தாக்குதல்களிலிருந்து தப்பிக்க முடியும். அதுவன்றி அல்லாஹ்வின் உதவி அவனுக்கு முன் குனிதல் இல்லாமல் நீங்கள் ஷய்த்தானின் தாக்குதலிலிருந்து தப்பிப்பது சாத்தியம் இல்லை. அல்லாஹ்வின் உதவியை தேடுங்கள்.

நான் ஏற்கனவே கூறியது போன்று ஷய்த்தான் கூறியிருந்தான். என்னைப் பலவந்தமாக தடுக்கா விட்டால் எனக்கு அவகாசம் தந்தால் நான் மனிதனை வழிகெடுப்பேன். அதற்காக முழுமையாக முயற்சிப்பேன். இந்த முயற்சி எவ்வாறு இருக்கும் எனில் மரணித்துக் கொண்டேயாவது தனது ஆதிக்கத்தில் வரத்தக்க ஒரு செயலைச் செய்ய வைக்க விரும்புகிறான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சபையில் ஒரு மனிதர் தனது கனவைக் குறிப்பிட்டார். அந்தக் கனவை கேட்ட பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இந்த கனவு ஒரு வியக்கத்தக்க விஷயத்தில் முடிந்துள்ளது. ஷய்த்தான் மனிதனை விதவிதமான வடிவத்தின் மூலமாக ஏமாற்ற விரும்புகிறான். ஆனால், உமது விளைவு மிக நன்றாக உள்ளதாக தெரிய வருகிறது. ஏனெனில், இந்தக் கனவின் முடிவு நல்ல இடத்தில் நிகழ்ந்துள்ளது. ஒரு மனிதர் தனது கனவைக் கூறிக் கொண்டிருந்தார். அவரது கனவின் முடிவிலிருந்து அவர் ஷய்த்தானின் தாக்குதலிலிருந்து தப்பித்து விட்டதாகத் தெரிய வந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பிறகு கூறினார்கள்: பெரும்பாலும் இவ்வாறு நடக்கிறது. மனிதன் ஷய்த்தானின் தாக்குதலிலிருந்து தப்பிக்க முயற்சி செய்யும்போது அல்லாஹ்வின் அருள் இருந்தால் தப்பிக்கிறான்.

பிறகு அன்னார் கூறினார்கள்: ‘‘ஒரு வலியுல்லாஹ்வின் சம்பவம் எழுதப்பட்டுள்ளது. அவருக்கு மரணத்தருவாயில் அவரது கடைசி வார்த்தை இப்போது இல்லை; இப்போது இல்லை என்பதாக இருந்தது. வலியுல்லாஹ் மரணித்துக் கொண்டிருக்கும் போது மரணத்தருவாயில் அவரது நாவிலிருந்து இப்போது இல்லை; இப்போது இல்லை என்ற இந்த சொல் வந்தது. அவரது சீடர்

ஒருவர் அருகில் இருந்தார். இதனைக் கேட்டு மிகவும் வியந்தார். என்ன விவகாரம் இது? இந்த வலியுல்லாஹ் இவ்வாறு இப்போது இல்லை; இப்போது இல்லை என்று ஏன் கூறினார்? என்று இரவும் பகலும் அழுது அழுது துஆ கேட்டார். அவரது மரணத்துக்குப் பிறகு, ஒருநாள் கனவில் அந்த வலியுல்லாஹ்வுடன் இவருக்கு சந்திப்பு நிகழ்ந்தது. அவரிடம் அது குறித்து கேட்டார். உங்கள் கடைசி வார்த்தை என்ன? ஏன் இவ்வாறு "இப்போது இல்லை; இப்போது இல்லை" என்று கூறினீர்கள் என்று கேட்டார். அந்த வலியுல்லாஹ் பதில் சொன்னார். ஷய்த்தான் ஒவ்வொரு மனிதனையும் அவன் மரணிக்கும் வேளையில் தாக்குகிறான். அவரது ஈமானின் ஒளியை கடைசி விளைவில் பறிப்பதற்காக அவ்வாறு செய்கிறான். அவன் தனது வழக்கம்போல் என்னிடமும் வந்தான். என்னை முர்தத் ஆக்க விரும்பினான். மார்க்கத்திலிருந்து விலக்க விரும்பினான். நான் அவனது காரியத்தை நடக்க விடாத போது என்னைப் பார்த்து நீ எனது கையில் இருந்து தப்பி விட்டாய் என்றான். எனவேதான் நான் இப்போது இல்லை; இப்போது இல்லை என்றேன். அதாவது நான் மரணிக்காதவரை எனக்கு திருப்தி கிடைக்க இயலாது."

(மல்∴பூஸாத் தொகுதி 5, பக்கம் 306; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

நிச்சயமாக நான் உனது எல்லா குழப்பங்களிலிருந்தும் தப்பித்துக் கொண்டிருக்கிறேன்தான் என்றாலும், எதுவரை எனது உயிர் இருக்குமோ அதுவரை நீ குழப்பிக் கொண்டுதான் இருப்பாய். எனவே, எதுவரை எனது உயிர் வெளியேறாதோ அதுவரை நான் உன்னிடம் இருந்து தப்பி விட்டேன் என்று கூற இயலாது.

ஆக, இதுவே அல்லாஹ்வின் வலிமார்களின் தகுதியாகும். அதனை அவர்கள் நம்முன் நிலைநாட்டியுள்ளார்கள். ஆக, எப்படியாவது அல்லாஹ்வின் வலிமார்களை தீய முடிவுக்கு உள்ளாக்கி அவர்களை நரகத்தில் போட வைக்க வேண்டும் என்பது ஷய்த்தானின் முயற்சியாக இருக்கிறது. ஒரு சாதாரண மனிதனாகிய ஒரு நம்பிக்கை கொண்டவருக்கு இது மிகவும் பயப்பட வேண்டிய இடமாகும். எந்தவோர் அலட்சியமான ஒரு வார்த்தை கூட அவனை ஷய்த்தானிடம் கொண்டு சென்று விடலாம். அதற்காக எப்போதும் தவ்பாவும் இஸ்திஃபாரும் செய்து வர வேண்டும்.

பிறகு மனிதனிடம் ஷய்த்தானுடைய தாக்குதல் குறித்து இன்னோரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "ஷய்த்தான் மனிதனை வழிகெடுப்பதற்காக அவன் செயல்களைக் குழப்பமுள்ளதாக்குவதற்காக எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். நன்மையான பணியில் கூட அவன் வழிகெடுக்க விரும்புகிறான். ஏதாவது ஒரு குழப்பத்தில் போடுவதற்கு திட்டமிடுகிறான். உதாரணமாக மனிதன் தொழுகிறான். அதில் கூட காட்டுதல் போன்ற கலப்படங்களைச் செய்ய விரும்புகிறான்." மனிதன் தொழுகிறான். அது நன்மையான செயல்தான். ஷய்த்தான் அவனது உள்ளத்தில் ஏதாவது ஒரு காட்டுதலின் காரியத்தைப் போட விரும்புகிறான். அதன் மூலம் குழப்பம் உருவாக்குவதற்காகவும் தொழுகை கலப்பற்றதாக இல்லாமல் போகவும் அவ்வாறு செய்கிறான்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "இமாமத் செய்பவரையும் கூட இந்த சோதனையில் போட விரும்புகிறான். இந்த தாக்குதலிலிருந்து ஒருபோதும் அச்சமற்று விடக்கூடாது. ஏனெனில் அவனது தாக்குதல் கட்டுப்படாதவர் மற்றும் தீயவரிடம் பகிரங்கமாக இருக்கிறது." தீயவரும் கட்டுப்படாதவரும் உலகத்தில் மூழ்கி தடம்புரண்டு மார்க்கத்தில் இருந்து விலகி இருக்கின்றனர். எனவே அவர்கள் மீது பகிரங்கமாக தாக்குதல் தொடுக்கின்றான். "அவர்கள் ஒரு வகையில் அவனது இரையாக இருக்கின்றனர். ஆனால் அவன் தூயவர்கள் மீதும் கூட தாக்குதல் தொடுக்க தயங்குவதில்லை." நல்லவர்கள், தூயவர்களாகிய அவர்களின் மீது தாக்குதல் தொடுப்பதில் இருந்து விலகுவதில்லை. ஏதாவது ஒரு வகையில் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு தாக்குதல் தொடுத்து விடுகின்றான். "எவர்கள் இறைவனது அருளின் கீழ் இருக்கிறார்களோ ஷய்த்தானது நுட்பத்திலும் நுட்பமான விஷமங்களில் இருந்து விழிப்புடன் இருப்பார்களோ அவர்கள் அவற்றில் இருந்து தப்பிப்பதற்காக துஆ செய்கிறார்கள். எவர்கள் குறைபாடும் பலவீனமும் உள்ளவராக இருப்பார்களோ அவர்கள் அவ்வப்போது தாக்குதலுக்கு உள்ளாகின்றனர்."(மல்∴பூஸாத் தொகுதி 6, பக்கம் 426; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆகவே, முஃமின்கள் எப்போதும் அல்லாஹ்விடம் துஆ மற்றும் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். ஷய்த்தானுடைய ஒவ்வொரு விஷமத்திலிருந்தும் அவன் நம்மை காப்பாற்றுவானாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இஸ்திக்ஃபாரின் பக்கம் கவனமூட்டியவாறு ஒரிடத்தில் கூறுகிறார்கள்: "அல்லாஹ் எப்போதும் இஸ்திக்ஃபார் செய்யும் ஏற்பாட்டை வைத்துள்ளான். மனிதன் ஒவ்வொரு பாவத்திற்காகவும் அது வெளிப்படையானதாக இருப்பினும் மறைவானதாக இருப்பினும் அதுபற்றி தெரிந்திருந்தாலும் தெரியாவிட்டாலும், கை, கால்கள், நாக்கு, காது, கண் இவை எல்லாவற்றின் பாவத்திலிருந்தும் இஸ்திக்ஃபார் செய்து கொண்டிருக்க வேண்டும்."

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: இக்காலத்தில் ஆதம் (அலை) அவர்களுடைய துஆவை செய்ய வேண்டும். அந்த துஆ என்ன?

رَبَّنَا ظَلَمۡنَاۤ اَنۡفُسَنَا وَاِنۡ لَّمۡ تَغۡفِرۡلَنَا وَتَرۡحَمۡنَا لَنَكُوۡنَنَّ مِنَ الۡخٰسِرِيۡنَ

*ரப்பனா ளலம்னா அன்ஃபுஸனா வ இன்லம் தக்ஃபிர்லனா வதர்ஹம்னா லனகூனன்ன மினல் காஸிரீன்* (மல்∴பூஸாத் தொகுதி 4, பக்கம் 275; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அதாவது எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதி இழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னிக்கா விட்டால் எங்கள் மீது கருணை காட்டாவிட்டால் நாங்கள் நஷ்டவாளர்களைச் சார்ந்தவராக ஆகி விடுவோம். (7:24)

பிறகு ஓரிடத்தில் நமக்கு போதனை செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: "இறைவனது கட்டளைகளை அவமரியாதையாகப் பார்க்காதீர்கள். தற்கால தத்துவங்களின் தாக்கம் உங்கள் மீது ஏற்பட வேண்டாம். ஒரு குழந்தையைப் போன்று ஆகி அவனது கட்டளையின் கீழ் செல்லுங்கள். தொழுங்கள், தொழுங்கள். அதுவே எல்லா ஆற்றல்களின் சாவியாகும். நீங்கள் தொழுகைக்காக நிற்கும்போது சம்பிரதாயமாக அதை நிறைவேற்ற வேண்டாம். மாறாக, தொழுகைக்கு முன் வெளிப்படையான உளூ செய்வது போன்று மறைமுகமான உளூவும் செய்யுங்கள். உங்கள் உறுப்புகளை அல்லாஹ் அல்லாதவற்றை விட்டு கழுவி விடுங்கள்." வெளிப்படையாக தண்ணீரால் உங்கள் உறுப்புகளை கழுவுகிறீர்கள். அதனைப் போன்று உங்கள் உறுப்புகளையும் உள்ளத்தையும் அல்லாஹ் அல்லாதவற்றை விட்டுக் கழுவி விடுங்கள். "அப்போது நீங்கள் இரு உளூவுடன் நில்லுங்கள். தொழுகையில் அதிகமாக துஆ செய்யுங்கள். அழுவதையும் கதறுவதையும் வழக்கமாக்குங்கள். அதன் மூலம் உங்கள் மீது கருணை காட்டப்படுவதற்காக அவ்வாறு செய்யுங்கள். சத்தியத்தை கடைபிடியுங்கள். அவன் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்." எப்போதும் ஒவ்வொரு விவகாரத்திலும் அவன் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று உறுதி கொள்ளுங்கள்.

அல்லாஹ் உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். உங்கள் உள்ளம் எவ்வாறிருக்கிறது என்று பார்க்கிறான். "மனிதன் அவனையும் கூட ஏமாற்ற முடியுமா? அவனுக்கு முன்னால் கூட தந்திரங்களைச் செய்ய முடியுமா? தனது கிளர்ச்சியான செயல்களை இறைவனே இல்லை என்பதுபோன்று அவன் வரை கொண்டு செல்பவர் மிகவும் பேறிழந்தவர் ஆவார். அவர் மிகவும் விரைவில் அழிக்கப்படுவார். இறைவன் சிறிதும் அவரைப் பொருட்படுத்துவதில்லை."

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "அன்பர்களே! இந்த உலகின் லாஜிக் ஷய்த்தானின் மந்திரமே ஆகும். இவ்வுலகின் வெறுமையான தத்துவங்கள் ஒரு இப்லீஸ் ஆகும்." வெறும் தாக்கங்கள் லாஜிக் போன்றவை ஷய்த்தானிய காரியங்களாகும். இவை மட்டுமல்ல. அல்லாஹ்வையும் தேட வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: "இவை ஈமானிய ஒளியை மிகத் தூரத்திற்கு விலக்கி விடுகிறது. வெறுமனே மந்திரங்ளையும் தர்க்க அறிவின் படியும் செல்வீர்கள் எனில் ஈமானிய ஒளி விலகி விடும். அது கடிவாளமில்லாத நிலையை உருவாக்கும். மிக விரைவில் அது அவரை நாத்திகத்திற்கு அருகில் கொண்டு சேர்க்கும். எனவே, இதிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். ஏழ்மையையும் எளிமையையும் விரும்பும் உள்ளத்தை உருவாக்குங்கள். ஒரு குழந்தை தனது தாயின் பேச்சைக் கேட்பது போன்று எந்தக் கூச்சலும் செய்யாமல் இறைக் கட்டளையை ஏற்பவராகுங்கள். திருக்குர்ஆனின் போதனைகள் தக்வாவின் மிக உயரிய நிலைக்கு கொண்டு சேர்க்க விரும்புகின்றன. அதன் பக்கம் செவி சாயுங்கள். மேலும், அதற்கேற்ப உங்களை உருவாக்குங்கள்."(இஸாலே அவ்ஹாம். ரூஹானி கஸாயீன் தொகுதி 3, பக்கம் 549)

அல்லாஹ், நம்மை ஷய்த்தானின் தாக்குதலில் இருந்து தப்பிக்கக் கூடியவர்களாக ஆக்குவானாக! நாம் இறைவன் முன் குனிந்தவாறு அவனிடம் உதவி கேட்டவாறு அவனது கட்டளையின் படி செல்பவர்களாவோமாக! திருக்குர்ஆனின் போதனையின்படி செயல்படுபவராவோமாக. அல்லாஹ் நமக்கு அவனது தேர்ந்தெடுக்கப்பட்டவரை ஒப்புக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கியதற்காக நன்றி செலுத்தும் நல்வாய்ப்பை வழங்குவானாக! அவர் ஷய்த்தானை வெற்றி கொள்ள வேண்டியதுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத் உடன்படிக்கையின் உரிமையை நிறைவேற்றியவாறு ஷய்த்தானின் ஒவ்வொரு தாக்குதலையும் தோல்வி அடையச் செய்வோர்களுடன் இணைவோமாக! அல்லாஹ் நமக்கு அதற்கு நல்வாய்ப்பினை வழங்குவானாக!

# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் 13 –வது வருடாந்திர அமைதி மாநாட்டில் அமீருல் மு·மினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ·பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் அருளுக்குரிய பங்கேற்பு. இஸ்லாத்தின் அழகான மற்றும் ஈடிணையற்ற போதனைக்கேற்ப உலகில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக ஹுஸூர் அவர்களின் எழுச்சிமிகு சொற்பொழிவு

அறிக்கை : ஹா:பிஸ் முஹம்மது ஸ:பருல்லாஹ் ஆஜிஸ் - அல் :பஸ்ல் இன்டர்நேஷனல் 22 ஏப்ரல் 2016, பக்கம் 13,14

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

இவ்வாறே பேராசிரியர் ஜான் கிரே (*John Gray*) அவர்களும் இது தொடர்பான தமது கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். இவர் ஓய்வு பெற்ற அரசியல் தத்துவ அறிஞராவார். இவர்கள் பல வருடங்கள் வரை *London School of Economics* -ல் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இவர் சில நாட்களுக்கு முன்னர் "தற்கால அரசியல் அமைப்பிற்கு எதிரில் அமைதிக்கு முன்னுரிமை வழங்குதலின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் அதைப் பற்றி இவ்வாறு எழுதுகின்றார்: "அரசாங்க அமைப்பு அது ஜனநாயக அமைப்பாக இருந்தாலும் சரி, சர்வாதிகார அமைப்பாக இருந்தாலும் சரி, மன்னராட்சியாக இருந்தாலும் சரி, குடியரசாக இருந்தாலும் சரி, இவை அனைத்துமே அமைதியை நிலைநாட்டுவதற்கு எதிரில் குறைவான முக்கியத்துவத்தையே கொண்டிருக்கின்றன."

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எனது கருத்தின்படி இது மிகவும் எழுச்சியூட்டக்கூடிய ஒரு கருத்தாகும். ஆனால், அவ்வாறிருந்தும்கூட பெரும் சக்திகள் இதற்கு முன்னர் ஓரளவு வலுப்பெற்றிருந்த இந்த நாடுகளில் அரசாங்க மாற்றம் ஏற்படுவதற்கு அதிகமாக முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றது. உதாரணமாக, மேற்கத்திய நாடுகள் ஈராக்கில் இருந்து சதாம் ஹுஸைனை அகற்ற அனைத்து வேலைகளையும் செய்து வந்தது. இந்த பதிமூன்று வருட கால போரின் மிகவும் துன்பத்தை தரக்கூடிய விளைவுகளை இன்றும் கூட உணர முடிகின்றது. இன்னொரு பெரிய உதாரணம் லிபியா ஆகும். இங்கு 2011 -ல் அதிபர் கடா·பி அவர்கள் வலுக்கட்டாயமாக அகற்றப்பட்டார். அந்த நேரத்திலிருந்து லிபியா சட்டத்தை மீறி செயல்படுவது மற்றும் அழிவு ஆகியவற்றிற்கு இரையாகிக் கொண்டிருக்கின்றது. லிபியாவில் இந்த அரசியல் இடைவெளியின் காரணமாக அதன் நேரடி விளைவு எவ்வாறு வெளிப்பட்டது என்றால் இப்போது அங்கு தாயிஷ் தீவிரவாதிகள் தீவிரவாதத்தின் வலுவான அடித்தளத்தை அமைத்து தங்களது வலையை விரித்து விட்டனர். அதனால் தீவிரவாதம் அங்கு வலுப்பெற்றுக் கொண்டே செல்கின்றது. இப்போது அங்கு நிலைமை மிகவும் அபாயகரமானதாக ஆகி விட்டது. இந்த அபாயம் இந்த பகுதிக்கு மட்டுமின்றி முழு ஐரோப்பாவிற்கும் இருந்து வருகின்றது.

இதைப் பற்றி சில வருடங்களுக்கு முன்னரே நான் எச்சரித்திருந்தேன். எனவே, இத்தகைய நாடுகளில் அரசாங்க மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கக் கூடாது. மாறாக, பொதுமக்களுக்கு அவர்களுக்கான அடிப்படை உரிமைகள் கிடைக்கின்றதா? என்பது உறுதி செய்யப்பட வேண்டும். அங்கு நீண்ட காலம் வரை அமைதி நிலைநாட்டப்பட வேண்டும்.

சிரியாவின் நிலைமைகளைப் பற்றி மீண்டும் நான் கூற முற்படும்போது ஆஸ்திரேலியாவின் வெளி விவகாரத்துறை அமைச்சரின் இந்தக் கருத்துக்கு முற்றிலும் ஒருமித்த கருத்தை உடையவனாக நான் இருக்கின்றேன். அதாவது, அமைதியை நிலைநாட்டுவதுதான் முதன்மையான நோக்கமாக இருக்க வேண்டும். எனவே பெரும் சக்திகள் சிரியாவின் அரசாங்கத்துடன் தொடர்புக்கான வழிவகைகளை திறந்து வைக்க வேண்டும். இந்தப் பகுதியில் பெருமளவில் தாக்கத்தைக் கொண்டிருக்கின்ற மற்ற அண்டை நாடுகளின் உதவியையும் பெற வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: விரிவான பலன்களுக்காக தமது சுய பயன்களை கைவிட்டு விட்டு எல்லா நேரமும் நீதியுடன் நடந்து கொள்வதன் மூலமாகவே சாதகமான மாற்றம் ஏற்படுவது சாத்தியமாகும். நீதி என்ற அடித்தளத்தில்தான் அமைதியின் கட்டடம் கட்டப்படுகின்றது என்று இஸ்லாம் கூறுகின்றது. எனவே, காலத்தின் உடனடி தேவையின் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். உலகம் இன்னோர் உலகப்போரின் பக்கம் சென்று கொண்டிருக்கின்றது என்று நான் பல வருடங்களாக எச்சரித்துக் கொண்டிருக்கின்றேன். இப்போது மற்ற மக்களும் இந்த விளைவை ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். உண்மை என்னவென்றால், சில முக்கிய நபர்கள் மூன்றாவது உலகப்போர் ஆரம்பமாகி விட்டது என்று கூற ஆரம்பித்துள்ளனர். அவ்வாறிருந்தும் கூட நம்மிடம் இந்தப் போரை தடை செய்வதற்கு இப்போதும் கூட கொஞ்சம் நேரம் இருக்கின்றது என்றே நாம் நினைக்கின்றேன். ஆனால், நாம் இதற்காக நீதியுடனும் நேர்மையுடனும் நடந்து கொள்வது அவசியமானதாகும். உங்களது ஏனைய அனைத்து பலன்களையும் ஒருபுறம் வைத்து விடுங்கள். இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் நான் தீவிரவாதப் பிரிவுகளுக்கு நிதியுதவி செய்யப்படுவதை நிறுத்துவது தொடர்பாகவும் அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுகின்ற *Supply Line* -ஐ துண்டிப்பது தொடர்பாகவும் பேசி இருக்கின்றேன். உதாரணமாக, இப்போது *Wall Street Journal* -ல் வெளி வந்திருக்கும் ஒரு சிறப்பான ஆய்வறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது. அதாவது, தாயிஷ் தீவிரவாதிகள் ஈராக்கிலுள்ள Central Bank -ன் ஏற்பாட்டின் கீழ் ஏலத்தின் மூலமாக மிகப்பெரும் எண்ணிக்கையில் அமெரிக்கன் டாலர்களைப் பெற்றுள்ளனர். இந்த டாலர்கள் ஈராக்கிற்கு நேரடியாக கிடைக்கும்படி செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஆய்வுக் கட்டுரையில் அமெரிக்க அரசாங்கத்திற்கு இந்த நிலைமையைப் பற்றி குறைந்தபட்சம் ஜுன் 2015 -லிருந்தே முழுமையாகத் தெரியும் என்ற குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நானும் இவ்வாறே கருதுகின்றேன். அதாவது, உலகிலுள்ள பெரும் சக்திகளுக்கு இந்த வியாபாரம் தொடர்பாக முதலிலேயே தெரியும்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இதை தவிர பெட்ரோல் விற்பனை தொடர்பாக எல்லாருக்கும் இந்த விஷயம் நன்றாகத் தெரியும். அதாவது பல்வேறு பிரிவினர் எதுவரையென்றால் அரசாங்கங்கள் கூட தாயிஷ் தீவிரவாதிகளிடமிருந்து பெட்ரோலை வாங்குகின்றனர். இந்த வியாபாரம் ஏன் தடை செய்யப்படவில்லை? அத்தகைய வியாபாரங்களின் மீது ஒட்டுமொத்தமான தடை ஏன் விதிக்கப்படவில்லை? பெட்ரோலைப் பெற்று கொள்கின்ற விவகாரம் வரும்போது இவர்கள் ஒழுக்கத்தைப் புறக்கணித்து விடுகின்றனர் என்பது தெரிய வருகின்றது.

இந்தக் கருத்தைத்தான் இலண்டனிலுள்ள Kings College -ன் பேராசிரியரான *Lief Wenar* அவர்கள் தனது ஒரு கட்டுரையில் இவ்வாறு எழுதுகின்றார்: உலகம் பெட்ரோலைப் பெற்றுக் கொள்வதற்காக எல்லா வகையான அநீதியையும் வரம்பு மீறுதலையும் சகித்துக் கொள்வதற்கு தயாராக இருக்கின்றது. நாடுகள் தாயிஷ் தீவிரவாதிகளிடமிருந்து பெட்ரோலை வாங்கியிருக்கின்றது. மனிதர்களுக்குரிய பல உரிமைகளும் வழங்கப்படாமல் படுகுழியில் தள்ளப்பட்டுள்ள சூடானிலிருந்தும் பெட்ரோல் வாங்கப்படுகின்றது. இந்த விஷயம் வியாபாரச் சந்தையின் அடிப்படை விதிமுறைகளுக்கு மாற்றமானதாகும். அதற்கேற்ப தீவிரவாதத்தின் விளைவாக நாடு மற்றும் சமுதாயத்தின் உரிமைகளை நிலைநாட்ட முடியாது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இதைத் தவிர சில நாட்களுக்கு முன்னர் ஈராக்கின் *Energy Institute* -ன் *Director* அவர்கள் தமது ஒரு கட்டுரையில் தாயிஷ் தீவிரவாதிகள் எவ்வாறு பெட்ரோலை விற்கின்றனர் என்பதை விபரமாக எடுத்து கூறியுள்ளார். கட்டுரையை எழுதியவர் அதில் இவ்வாறு எழுதுகின்றார்: பெட்ரோல் டாங்கர்கள் மூலமாக அன்பார் மாநிலத்திலிருந்து ஜோடானுக்கு அனுப்பப்படுகின்றது. மேலும், கிர்திஸ்தான் வழியாக ஈரானுக்கும் பணம் வசூலித்த பிறகு அது துருக்கி மற்றும் சிரியாவிலுள்ள உள்ளூர் சந்தையிலும் கூட விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறே ஈராக்கிலுள்ள கிர்திஸ்தான் மண்டலத்தில் இதன் பெரும் பகுதி உள்ளூரில் வைத்து சுத்திகரிக்கப்படுகின்றது. இந்த நாடுகளிலுள்ள அரசாங்க நிர்வாகத்திற்கு தொடர்ச்சியாக நடந்து வரும் இந்த எல்லா விஷயங்களையும் பற்றியும் எதுவும் தெரியாது என்பதை அறிவு ஏற்று கொள்ளாது. எனவே, தீவிரவாத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இயன்றவரை எல்லா முயற்சிகளும் செய்யப்படுகின்றது என்று வாதம் செய்யப்படும்போது உண்மையான நிலைமைகள் இந்த வாதம்

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 99448-03650
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
பதர் வாரப் பத்திரிகை காதியான்

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
Tel. : +91 1872-224757
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

Vol. 1 | Thursday 23 JUNE 2016 | Issue No. 16

சரியானது என்று நிரூபிக்கவில்லை. இந்த எல்லா விஷயங்களையும் கண்முன் நிறுத்துகின்றபோது உலகில் உண்மையான நீதி இருக்கின்றது என்று எவ்வாறு கூற முடியும்? நேர்மைக்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வதற்கும் மிகவும் முக்கியத்துவம் தரப்படுகின்றது என்று எவ்வாறு வாதம் செய்ய முடியும்?

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இவ்வாறே சில நாட்களுக்கு முன்னர் உலகளாவிய அளவில் ஆயுதங்கள் பரவலாக வழங்கப்படுவது தொடர்பாக பல அறிக்கைகள் ஊடகங்களில் வந்துள்ளன. அரசாங்க அறிக்கைகள் மற்றும் நம்பத்தகுந்த அறிக்கைகளின் அடிப்படையில் கடந்த வருடத்தில் அமெரிக்கா 46.6 பில்லியன் டாலர் பெறுமானமுள்ள ஆயுதங்களைச் சந்தையில் விற்பனை செய்திருக்கின்றது. கடந்த ஆண்டை விட இது 12 பில்லியன் டாலர் அதிகமாகும். இந்த அறிக்கைகளில் இந்த ஆயுதங்கள் அதிகபட்சமாக மத்தியக் கிழக்கு நாடுகளிலேயே விற்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறு அவை சிரியா, ஈராக், மற்றும் யமனில் மேலும் போரைத் தூண்டுவதற்குக் காரணமாக இருக்கின்றது.

ஹுஸூர் அவர்கள் கூறுகின்றார்கள்: இத்தகைய வியாபாரம் நடக்கும்போது உலகில் அமைதியையும் நீதியையும் நிலைநாட்டுவது எவ்வாறு சாத்தியமாகும்? நான் கூறிய இந்த சில உதாரணங்கள் பற்றி ஒவ்வொருவரும் அறிந்திருக்கின்றனர். இதில் தனிச்சிறப்பைப் பெற்றுள்ள ஆய்வாளர்களும் கருத்துக் கூறுபவர்களும் அடங்குவர்.

ஹுஸூர் அவர்கள் கூறுகினார்கள்: எதுவரை சமுதாயத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் சமுதாயங்களுக்கிடையிலும் நீதியின் வழிமுறைகள் கடைபிடிக்கப்படுவதில்லையோ அதுவரை உலகில் உண்மையான அமைதியை நாம் பார்க்க முடியாது. நீதியுடன் நடந்து கொள்ளாமல் தாயிஷ் மற்றும் இது போன்ற பிற தீவிரவாதப் பிரிவுகளை நாம் தோற்கடிப்பதற்கு பல வருடங்கள் தேவைப்படும். ஆனால், உலகம் இந்த தூதுச்செய்தியின் பக்கம் கவனம் செலுத்தினால் நீதியில் நிலைத்திருந்தால் தீவிரவாதத்திற்கு நிதியுதவி செய்வதை நிறுத்துவதற்கும் ஆயுதங்கள் வழங்கப்படுவதை தடை செய்வதற்கும் உண்மையான முறையில் முயற்சி செய்தால் தாயிஷ் தீவிரவாதிகளுக்கு எதிரான போர் பத்திலிருந்து இருபது வருடங்கள் வரை நீடிக்கும் என்று ஒய்வு பெற்ற ஓர் அமெரிக்க ஜெனரல் கூறியதற்கு நேர் மாற்றமாக தீவிரவாதத்தின் *Network* -ஐ மிக விரைவாக நம்மால் அழித்து விட முடியும்.

ஹுஸூர் அவர்கள் கூறுகினார்கள்: இறுதியாக நான் இதையே கூற விரும்புகின்றேன். உலகம் எதுவரை தன்னை படைத்தவனை அடையாளங்கண்டு கொள்ளவில்லையோ அவனை முழு உலகங்களையும் படைத்து வளர்த்து காத்தோம்புவனாக ஏற்றுக் கொள்ளவில்லையோ அதுவரை உண்மையான நீதி வெற்றி பெற முடியாது என்பதே எனது கொள்கையாகும். உண்மையான நீதி வெற்றி பெற முடியாது என்பது மட்டுமல்ல. மாறாக, உலகம் ஓர் அபாயகரமான மற்றும் அழிவை ஏற்படுத்தக்கூடிய அணு ஆயுதப் போரை எதிர் கொள்ளும். அதன் விளைவுகளை நமது எதிர்கால சந்ததிகள் பார்க்க வேண்டியது வரும்.

ஹுஸூர் அவர்கள் கூறுகின்றார்கள்: உலகம் இந்த உண்மையை புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது துஆவாகும். நான் துஆ செய்கின்றேன். நாம் அனைவரும் மனிதநேயத்தின் உண்மையான நோக்கங்களைப் பெறுவதற்காக தத்தமது பங்கை செலுத்துபவர்களாக நாம் ஆவோமாக! நான் துஆ செய்கிறேன். நீதியின் அடிப்படையில் நிலைநிற்கின்ற உண்மையான அமைதி உலகில் எல்லா பகுதிகளிலும் நிலைநாட்டப்படட்டும்! இந்த சொற்களுடன் இந்த மாலை வேளையில் எங்களுடன் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விருந்தினர்களாகிய உங்கள் அனைவருக்கும் நான் நன்றி செலுத்துகின்றேன். அல்லாஹ் உங்கள் அனைவர் மீதும் தனது அருள்களை இறக்குவானாக! மிகவும் நன்றி.

இந்த சொற்பொழிவிற்கு பிறகு ஹுஸூர் அவர்கள் கூட்டு துஆ செய்தார்கள்.

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ ۛ فِيْهِ ۛ هُدًى لِّلْمُتَّقِيْنَ ۙ الَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ
وَيُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ ۙ وَالَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِمَآ
اُنْزِلَ اِلَيْكَ وَمَآ اُنْزِلَ مِنْ قَبْلِكَ ۚ وَبِالْاٰخِرَةِ هُمْ يُوْقِنُوْنَ ۙ
اُولٰٓئِكَ عَلٰى هُدًى مِّنْ رَّبِّهِمْ ۗ وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ

பொருள்: இந்த வேதம் சந்தேகங்களிலிருந்து தூய்மையானதாகும். இறையச்சமுடையோருக்கு நேர்வழியினை வழங்கக் கூடியது. இறையச்சமுடையவர்கள் (மறைவிலும் மறைவாக இருக்கின்ற) இறைவன் மீது நம்பிக்கை கொள்கின்றனர். தொழுகையினை நிலைநாட்டுகின்றனர். தமது செல்வத்திலிருந்து இறைவனின் வழியில் சிறிது செலவு செய்கின்றனர். உமக்கு இறக்கப்பட்ட வேதத்தின் மீதும் உமக்கு முன்னர் அருளப்பட்ட வேதங்கள் மீதும் அவர்கள் நம்பிக்கை கொள்கின்றனர். இவர்களே தங்கள் இறைவனின் நேர்வழியில் இருப்பவர்களாவர். மேலும் இவர்களே இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வர்.

முர்தத் ஆகி விட்ட அப்துல் ஹகீமே! இப்போது எழுந்திருங்கள். கண்களைத் திறங்கள். இறைவன் இந்த வசனங்களில் தீர்ப்பு கூறி விட்டான். அதாவது, மக்கள் இறைவனது வேதங்கள் மீது நம்பிக்கை கொண்டு அவனது அடியானாக இருக்க வேண்டும் என்ற விஷயத்தினால் மட்டுமே இரட்சிப்பைப் பெறுவதை அவன் வைத்துள்ளான். இறைவனது வசனங்களில் குறைபாடும் முரண்பாடும் இருக்க முடியாது. அல்லாஹ் ஜல்ல ஷானஹு இரட்சிப்பு பெறுவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதுடன் தொடர்புபடுத்திக் கூறியுள்ளான். பிறகு இந்த வசனங்கள் தருகின்ற உறுதியான ஆதாரங்களிலிருந்து முகந்திருப்பியவாறு உவமை வடிவிலான விஷயங்களின் பக்கம் ஓடுவது நேர்மையின்மையாகும். நயவஞ்சகத்தின் நோயால் பீடிக்கப்பட்டு நோயாளிகளாக இருக்கின்ற அத்தகைய மக்களே உவமை வடிவிலான விஷயங்களின் பக்கம் ஓடுகின்றனர்.

(ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 133-136)

☆ மனிதன் உண்மையான மார்க்கத்தில் இருக்கும் போது நற்செயல்களைச் செய்வதன் மூலமாக இறைவனிடமிருந்து ஓர் அருட்கொடையைப் பெறுகின்றான். இவ்வாறே அல்லாஹ்வின் நடைமுறையும் இருக்கின்றது. உண்மையான மார்க்கத்தில் இருப்பவர் தனது முயற்சியின் மூலமாக எந்த எல்லை வரை செல்கின்றாரோ தனது முயற்சியின் மூலமாக அடி எடுத்து வைக்கின்றாரோ அந்த எல்லையோடு அவர் நின்று விடுவதில்லை. மாறாக, அவரது முயற்சி எல்லையை அடைந்து விடும்பொழுது மேலும், மனித முயற்சிகளின் பணி முடிந்து விடும்பொழுது இறைவனின் அருள் அவனுக்குள் தனது பணியைச் செய்கின்றது. மேலும், இறைவனின் நேர்வழியானது எந்த உயர்ந்த தகுதி வரை அவரைக் கொண்டு சென்று அவரது அறிவிலும் செயலிலும் இறை ஞானத்திலும் அவருக்கு முன்னேற்றத்தைத் தருகின்றது என்றால் அந்த உயர்ந்த தகுதி வரை அவர் தனது முயற்சியால் சென்று சேர முடியாது.

இதைப் பற்றி பிறிதோரிடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا அதாவது எவர்கள் நமது வழியில் முயற்சி செய்கின்றனரோ அவர்களாலும் அவர்களது ஆற்றல்களாலும் செய்ய முடிந்தவற்றைச் செய்கின்றனரோ அவர்களின் கைகளை ஏக இறைவனின் அருள் பிடித்து கொள்கின்றது. எந்தப் பணியை அவரால் செய்ய முடியவில்லையோ அதனை தானே அது செய்து காட்டுகின்றது. ☆ அப்துல் ஹகீமின் எழுத்துகளிலிருந்து நாம் இயன்றவரை புரிந்து கொண்டது என்னவென்றால் முர்தத் ஆவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கின்றது. அதாவது, எந்த நபருக்கு தனது கருத்திற்கேற்ப இஸ்லாத்தின் உண்மைக்கு போதுமான ஆதாரம் கிடைக்கவில்லையோ அவர் இஸ்லாத்தை விட்டு விட்டு முர்தத் ஆகி விட்டாலும் கூட இரட்சிப்பைப் பெற முடியும். ஏனென்றால், இஸ்லாத்தின் உண்மை தொடர்பாக அவருக்கு திருப்தி கிடைக்கவில்லை. ஆனால், அவரது பார்வையில் எந்த அளவு அவர் மீது அத்தாட்சி நிறைவடைந்துள்ளது என்பதை அவர் எடுத்துக் கூற வேண்டும்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad